
# முருக இலக்கிய ஆய்வுக்கோவை

## தொகுதி – II



பதிப்பாசிரியர்கள்

முனைவர் மோ. கோ. கோவைமணி

பெரும்புலவர் ப. வெ. நாகராஜன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

(தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையும் சிரவையாதீனத் தவத்திரு கஜபூசைச் சுந்தரசுவாமிகள் தமிழாய்வு மையமும் இணைந்து நடத்திய அனைத்துலக முருக இலக்கிய மாநாடு மற்றும் கருத்தரங்கக் கட்டுரைகள்)

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண்: 442
திருவள்ளுவராண்டு 2049, சித்திரை - மே 2018.

| | |
|---|---|
| நூல் | : முருக இலக்கிய ஆய்வுக்கோவை - தொகுதி 2 |
| பதிப்பாசிரியர்கள்: | முனைவர் மோ.கோ. கோவைமணி<br>பெரும்புலவர் ப.வெ. நாகராஜன் |
| ISBN | : 978-81-936876-4-2 |
| மொழி | : தமிழ் |
| பொருள் | : இலக்கியம் |
| பதிப்பு | : முதற்பதிப்பு மே 2018 |
| பக்கம் | : xx+564=584 |
| தாள் | : டி.என்.பி.எல். 18.6 |
| அளவு | : 1/8 டெம்மி |
| நூல் கட்டுமானம்: | சாதாரண கட்டுமானம் |
| படிகள் | : 450 |
| விலை | : ரூ.500/- |
| கணினியச்சு | : பாமொழி கணிப்பொறி வடிவமைப்பகம்<br>1421, பாரதி நகர்,<br>தமிழ்ப் பல்கலைக்கழக அஞ்சல்<br>தஞ்சாவூர் - 613 010.<br>அலைபேசி : 8903447547 |
| அச்சு | : திருவள்ளுவர் ஆப்செட் பிரிண்டர்ஸ், தஞ்சாவூர்.<br>அலைபேசி : 9892491204 |
| வெளியீடு | : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம்,<br>தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |

97. ஆறுபடைவீடு (4,5,6 மட்டும்)
முனைவர் இரா.சு. முருகன் 457
98. முருகன் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் சமய உண்மைகள்
எச். மூர்த்தி 461
99. ஆறு
எஸ் வி.ஆர். மூர்த்தி 466
100. எண்ணக் கண் கொண்டு இமை திறந்த சிற்பங்கள்...!
க. மோகன்ராஜ் ஸ்தபதி 471
101. தாலாட்டுப் பாடல்களில் முருகன்
அ. ரஞ்சனி 474
102. புராணங்களில் முருகன்
ப. ரஞ்சனி 479
103. நக்கீரர் காட்டும் முருக வடிவம்
முனைவர் ஆ. ரந்திர்குமார் 485
104. முருக வழிபாட்டில் காவடியாட்டம்
முனைவர் ம. ரமேஷ் 489
105. ஆறுபடைவீடு (1,2 ,3 மட்டும்)
சீ. ராணி 492
106. முருகனின் செயல்களும் உவமைகளும் அறிவியல் உண்மைகளும்
வெ. ராமதிலகம் 496
107. முருகனின் பெருமையும், அருட்சிறப்பும்
முனைவர் கு. ராஜலட்சுமி 499
108. திருமுருக வடிவமும் வழிபாடும்
முனைவர் மு. ராஜஸ்ரீ 503
109. தொல்லியல் நோக்கில் தமிழக் கடவுள் முருகன் - ஓர் ஆய்வு
வெ. ராஜேந்திரன் 507
110. கந்தபுராணம் உணர்த்தும் பக்திநிலை
ச. ராஜேஸ்வரி 513
111. முருகனின் அழகுக்கலைகள்
முனைவர் மு. ருக்மணி 518
112. முருகனைப் போற்றும் அருணகிரியார்
வே. ரேகா 523
113 தமிழ்க் கடவுள் முருகன்
முனைவர் க. லதா 526

# தமிழ்க் கடவுள் முருகன்

முனைவர் க. லதா,
இணைப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை.

தமிழரின் தனிப்பெருங்கடவுள் முருகன். தொன்மைத் தமிழுடன் முருகக் கடவுளின் காலமும் ஒப்ப வைத்து எண்ணத்தக்கது. முருகு, முருகியல் என்னும் சொற்கள் அழகு மற்றும் அழகியல் சார்ந்தது எனக் கூறப்பட்டாலும் சங்க இலக்கியம் வலிமை, சீற்றம், சினம், அழித்தல் எனப் பொருள் தருகிறது. எனவே முருகன் என்னும் சொல்லுக்கு வீரமிக்கவன், சீற்றமுடையவன், வலிமையுடையவன், அழிப்பவன், சிதைப்பவன் என்று பொருள் கொள்ள வேண்டும். ஏனெனில்,

*"புலிக்கணத்தன்ன நாய்த்தொடர்வீட்டு*
*முருகன் அன்ன சீற்றத்துக் கருந்திறல்*
*எந்தையும் இல்லன் ஆக"* (அகம் : 158)

என்ற தொடர்களும்,

*"முருகன் சீற்றத்துருகெழு குரிசி*
*தாய்வயிற் றிருந்து தாயமெய்தி"* *(பொருநர் : 131-132)*

*என்ற அடிகளும்,*

*"கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்*
*சூர்நவை முருகன் சுற்றத் தன்ன"* (புறம் : 23)

என்ற புறநானூற்று வரிகளும் முருகக் கடவுளைச் சீற்றம் கொண்டவன் என்றே சித்திரிக்கின்றன. அத்துடன் முருகன் போரில் சிறந்தவன் வெற்றிவாகை சூடுபவன் என்பதையும் அறியமுடிகிறது. இதனை,

*"அடியொதுங்கிப் பிற்பெயராப்*
*படையோர்க்கு முருகு அயர*
*அமர் கடக்கும் வியன் தானைத்*
*தென்னவர் பெயரிய துன்னருந்துப்பின்"* (மதுரைக்காஞ்சி 37-40)

என்ற தொடர்களும்,

*"முருகுறழப் பகைத்தலைச் சென்று*
*அகல்விசும்பின் ஆர்ப்பிமிழ"* (மதுரை.: 181-182)

என்ற தொடர்களும் உணர்த்தியமைகின்றன. எண்ணியதைத், தொடங்கியதை முடிக்கின்ற மன்னவர்களைப் புலவர்களும்,